புதிய தேர்தல் முறைக்கு சர்வஜன வாக்கெடுப்பு தேவை

## எதிர்க்கட்சிகள் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் எந்த அடிப்படையில் பொதுத்தேர்தலை நடத்துவது என்பது பற்றி பொதுமக்களின் அபிப்பிராயங்களை அறிவதற்கு முதலில் சர்வஜன வாக்கெடுப்பை நடாத்த வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் அரசிடம் வேண்டுகோள் விடுத்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. வருங்காலத்தில் இலங்கையில் நடைபெறவிருக்கும் தேர்தல்களை தற்போது நடைமுறையிலிருக்கும் விகிதாசார அடிப்படையில் நடாத்துவதா அல்லது தேர்தல் தொகுதி ரீதியில் எம். பிக்களை தெரிவு செய்வதா என்று பொது மக்களின்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 66 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 22 இதழ் 170
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 6 — 8 — 1993

## தடை செய்யப்பட்ட பொருள்கள் ஒரு கப்பலை மாத்திரம் அனுப்ப அரசு ஆலோசனை

(கொழும்பு)

யாழ். நகரில் உண்ணாவிரதத்தை மேற்கொண்டுவரும் 33 யுத்தக் கைதிகளின் விடுதலைக்காக தடை செய்யப்பட்ட பொருள்கள் அடங்கிய ஒரே ஒரு கப்பலை மட்டும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதற்கு அரசு தற்போது ஆலோசித்துவருவதாக பி. பி. ஸி. நேற்று தெரிவித்தது. யுத்தக் கைதிகளை விடுதலை செய்யவேண்டுமாயின் வ...

4ம் பக்கம் பார்க்க

## யாழ். அரச அதிபர் வரும்வரை உண்ணாவிரதத்தை கைவிடுமாறு கோரி ஜெனரல் ஹமில்டன்

# கைதிகளுக்கு அவசர கடிதம்

(கொழும்பு)

புலிகளின் பாதுகாப்பில் உண்ணாவிரதமிருக்கும் யுத்தக்கைதிகள் தமது உண்ணாவிரதத்தைக் கைவிடவேண்டும் எனக் கூட்டுப் படை தலைமையக தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க கைதிகளுக்கு அவசரகடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எதிர்வரும் 7ம் திகதி யாழ். அரச அதிபர் யாழ். வரும் வரையில் உண்ணாவிரதத்தை கைவிடுமாறு ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா கோரி

(4ம் பக்கம் பார்க்க)

## "நீர் அருந்தி உண்ணாவிரதத்தை தொடர்வோம்" கைதிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜெனரல் ஹமில்டன் வன சிங்காவின் வேண்டுகோளுக்கு அவருக்கு மரியாதை செலுத்துமுகமாகவும் நீர் அருந்தி உண்ணாவிரதத்தை தொடர முடிவு செய்துள்ளோம்." என்று உண்ணாவிரதமிருக்கும் யுத்தக் கைதிகளில் ஒருவரான எச். எம். பியரட்ன "புலிகளின் குரல்" வானொலிக்கு தெரிவித்தார். மேற்கண்டவாறு அவர் மேலும் தெரிவிக்கை

(4-ம் பக்கம் பார்க்க)

## கைதிகளை விடுவிக்க அரசு முயற்சி எடுக்கிறது - பிரட்மன் வீரக்கோன்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் யுத்தக் கைதிகளை விடுவிப்பதற்கு அரசு சகல முயற்சிகளையும் எடுத்து வருவதாக ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் திரு பிரட்மன் வீரக்கோன் நேற்று கொழும்பில் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

எனினும் இதுசம்பந்தமான விபரங்கள் எதனையும் திரு. வீரக்கோன் வெளியிடவில்லை. இதேவேளையில் யுத்தக்

(4ம் பக்கம் பார்க்க)

## அம்புலன்ஸ் பழுதடைந்ததால் நோயாளி உயிர் பிரிந்தது

(எழுதுமட்டுவாள்)

அவசர சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டியில் நோயாளி ஒருவர் ஏற்றிவரப் பட்டபோது அம்புலன்ஸ் வண்டி வழியில் பழுதடைந்ததால் அந்தநோயாளி இறக்க நேரிட்டதாக தெரிவிக்கப் படுகிறது.

இதுபற்றி தெரியவருவதாவது: கடந்தபுதன்கிழமை சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குச் சொந்தமான அம்புலன்ஸ் வண்டியில் மட்டுவிலைச் சேர்ந்த க. மயில்

(4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி - பூநகரி படகுச்சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வெள்ளிக்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது.

மணலாறு தாக்குதல்:

# இரண்டாவது பெரிய ராணுவ முகாமையேபுலிகள் தாக்கினர்

## கொழும்பு பத்திரிகை தெரிவிப்பு

(கொழும்பு)

'ரெட் அலர்ட்' என்ற 24 மணித்தியாலமும் படையினர் உஷார்நிலையில் இருந்தவேளை யிலேயே விடுதலைப் புலிகள் மண்கிண்டிமலை இராணுவ முகாமை தாக்கி அழித்துள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது-

4-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் தாக்குதல் சிப்பாய் பலி

(யாழ்ப்பாணம்)

வவுனியா செட்டிகுளம் இராணுவ காவலரண் மீது விடுதலைப் புலிகள் அண்மையில் மேற்கொண்ட கிளைமோர் தாக்குதல் ஒன்றில் இராணுவ சிப்பாய் ஒருவர் கொல்லப் பட்டார்.

இதேவேளை பூநகரி கல்மு

(4-ம் பக்கம் பார்க்க)

## விசாரணைக்குழு சென்றபோது புலிகள் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மண்கிண்டி மலை தாக்குதல் குறித்து விசாரணை செய்வதற்கு மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா தலைமையிலான விசாரணைக்குழு அங்கு சென்ற வேளையில் மணலாறுப் பொலிஸ் நிலையம் மீது விடுதலைப் புலிகள் பலத்த ஷெல் தாக்குதலை மேற்கொண்டதாக தெரியவருகிறது.

இதன் பின்னரும் அடுத்த நாளும் இப் பகுதியில் விடுதலைப் புலிகளால் ஷெல் தாக்குதல் பரவலாக மேற்கொள்ளப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கில் ராணுவ நடவடிக்கை தொடர்கிறது

## - பிரிகேடியர் நளின் அங்கமன

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டு வருவதாக கூட்டுப் படைத் தலைமையக சிரேஷ்ட பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமன தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் நடை பெற்ற வாராந்த பத்திரிகை யாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில்: விடுதலைப் புலிகளின் தளங்கள் மீதே விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விமானத்தாக்

(4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்குக்கான விவசாய உதவித்திட்டத்தில் பலகோடி ரூபா மோசடி

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதிகளின் விவசாய அபிவிருத்திக்கு பல வெளிநாட்டு நிறுவனங்களினால் அனுப்பப்பட்ட பல கோடிரூபா பெறுமதியான விவசாய உபகரண பொருட்களில் பெரும் மோசடி நடை பெற்றுள்ளதாகவும் அதை உடனடியாக விசாரணை செய்ய வேண்டுமென்றும் நேற்று பாராளுமன்றத்தில் பல தமிழ் எம். பிக்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

விவசாயதிருத்தச்சட்ட மூலத்

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### O/L ஆங்கிலம் 93

Distinction, Credit பெறு பேறடைய அனுபவமுள்ள B.Sc(cey) ஆசிரியரைக் கொண்டு கள் 10, 9, 8 உட்படக் கற்பிக்கப்படும். 85, இலங்கோவிலடி, திருநெல்வேலி.

(இ-371)

### விற்பனைக்கு

யாழ். பல்கலைக்கழக வெளிவாரி B. A., G. A. Q பரீட்சைக்குரிய பாடநூல்கள், வினாவிடைகள் மற்றும் பாடசாலைப் புத்தகங்கள், உபகரணங்கள் குறைந்த விலையில் விற்பனையாகிறது. தினேஷ் புத்தகசாலை, பஸ்நிலையம். யாழ்ப்பாணம். (எ-3305)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலைசுலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, விரியக்குறைவு மூலவியாதிகள், மூதிரரோகங்களில் பிரபலமான வர். சகலவியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி சி. இராசரத்தினம்121, 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(இ-310)

### புத்தகங்கள் விற்பனை

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு இந்திய நாவல்கள், டிக்செநெறிகள், ஆங்கிலதமிழ் வெஞ்சியம் மற்றும் டிக்செநெறி) ஸ்ரீகாந்தா புத்தகசாலை, நல்லூர்.

(ஏ-3277)

### பழைய புத்தகக் கடை

கிடைத்தற்கரிய பழைய தமிழ், ஆங்கில, சரித்திர, சாஸ்திர, சமய, இலக்கிய கதைப் புத்தகங்களும், சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் மாணவர்களின் பாடப்பயிற்சி கடந்தகால வினாவிடைத்தாள்களும் நியாய விலையில் விற்கவும், மலிவு விலையில் வாங்கவும் மிகச்சிறந்த இடம் யாழ். பழைய புத்தகக் கடை, ஆர்சுனு வீதி (ஸ்ரான்லி வீதி), விவேகானந்த அச்சக முன்பாக, யாழ்ப்பாணம்.

(இ-386)

## குடிநீர் வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை வசந்தபுரம் வாழ் மக்களின் குடிதண்ணீர் பிரச்சினையைப்போக்கு முகமாக யாழ்ப்பாணம் மெதடிஸ்த திருச்சபையால் நாவாந்துறை தலியன் பாலர் பாடசாலை முன்றலில் நீர்தாங்கி ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது

(162)

## தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலய உற்சவகால நிகழ்ச்சியில் இன்று நாவலர் மணிமண்டப முன்றலில் நடைபெறும் தெய்வீக இசையரங்கில் கலாசாம்பவி பத்மநாதனின் இன்னிசைக் கச்சேரி நடைபெறும். சாந்தநாயகி சுப்பிரமணியம்-வயலின், கே. கண்ணதாசன்-மிருதங்கம்.

(162)

## இன்று

(அரியாலை)

இலந்தைப் பண்டத்தரிப்பு மக்களின் பரதுகாவலராக விளங்கும் புனித சதிரை மாதா வருடாந்த திருவிழா இன்று 6-ம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் கூட்டுத்திருப்பலி சொரூப பவனி ஆகியவற்றுடன் நிறைவு பெறுகின்றது.

(59)

0 0 0

(யாழ்ப்பாணம்)

திருக்கேதீஸ்வரமும், நகுலேசுவரமும் மற்றும் பூசைகள் தடைப்பட்டுள்ள சிவாலயங்கள் மீளத் திறக்கப்பட்டு நித்திய நைமித்திய பூசைகள் நடைபெறவும் மக்கள் துயர் நீங்கவும் வேண்டிய பிரார்த்தனை இன்று 6-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு கந்தர்மடம் ஸ்ரீசிவ குருநாத குருபீடம் வேதாந்த மடம் மகாதேவா சுவாமிகள் ஆச்சிரமத்தில் குருபீடாதிபதி ஸ்ரீமத் சோமஸ்கந்த வேள் சுவாமிகள் தலைமையில் நடைபெறும்.

## அறிவித்தல்

### வட இலங்கைச் சங்கீத சபை

### அதிமுறைத் தேர்வு - 1993

தவிர்க்கமுடியாத காரணங்களால் பின்போடப்பட்ட மேற்படி தேர்வு 1993 - 09 - 04 (சனி) 1993 - 09 - 05 (ஞாயிறு) ஆகிய திகதிகளில் நடத்துவதற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது. தேர்வு நாடிகளுக்கு முன்னர் அறிவிக்கப்பட்ட தேர்வு நிலையங்களில் 1993 - 05 - 15 ந் திகதி நடைபெறவிருந்த பாடங்கள் 1993 - 09 - 04 ந் திகதி சனிக்கிழமையும், 1993 - 05 - 16 ந் திகதி நடைபெறவிருந்த பாடங்கள் 1993 - 09 - 05 ந் திகதி ஞாயிற்றுகிழமையும் நடைபெறும் என்பதைத் தேர்வு நாடிகளுக்கு அறியத்தருகிறேன்.

இ. சுந்தரலிங்கம்,
யாழ். மாவட்டக் கல்விப்பணிப்பாளரும்,
வட இலங்கைச் சங்கீதசபைத் தலைவரும்.

ஏ - 3812

## கலைவிழா

யாழ் - நல்லூர்

சென் பெனடிக்ற் றே. க. வித்தியாலய அபிவிருத்தி

### நிதியுதவி நிகழ்ச்சி

காலம்: 06-08-1993 வெள்ளிக்கிழமை
இடம்: அரியாலை சனசமூகநிலைய அமரர் சாசிப்பிள்ளை அரங்கு
நேரம்: இரவு 7.00 மணிமுதல்

★ பரதநாட்டியம் ★

யாழ் மாவட்டத்தின் புகழ் பூத்த நடன ஆசிரியர் நாட்டியக் கலைமணி பரதகலா வித்தகி செல்வி மைதிலி அம்பலவாணர் அவர்களும் அவரின் மாணவிகளும் வழங்குகின்றனர்

★ நாடகங்கள் ★

யாழ். மடம் வீதி திருவள்ளுவர் நிலைய புதுயுகம் நாடக கலாமன்றத்தினர் வழங்கும்

**"உணர்வுகள் உறங்குவதில்லை"**

**"விடியலைத்தேடும் வேங்கைகள்"**

(புரட்சி நாடகங்கள்)

பிரவேசம் ரூபா பத்து மட்டுமே

— பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர்

(இ 390)

## வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

295/35 கே. கே. எஸ். வீதி, கோணந்தோட்ட ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

### முக்கிய அறிவித்தல்

## கிளைக்குழுத்தேர்தல் - 1993

மேற்படி சங்கத்தின் கிளைக் குழுத் தெரிவுக்கான நியமிப்புப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் திகதி 15-08-93 ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9-00 — மு. ப. 10-00 மணி வரை. அபேட்சகர்களின் நியமிப்புக்கு ஆட்சேபனைகள் ஏதேனும் இருப்பின் அன்றைய தினம் மு. ப. 10-00 மணி முதல் 11-00 மணி வரை தேர்தல் உத்தியோகத்தரால் எழுத்துமூலமான ஆட்சேபனைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேர்தல் திகதி 22-08-93 ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9-00 — பி. ப. 4-00 மணி வரை நடைபெறும்.

பின்வரும் கிளைகளுக்கான நியமிப்புப் பத்திரங்கள் பின்வரும் இடங்களில் ஏற்றுக்கொள்ளப்படும்.

| கிளை இல. | கிளையின் பெயர் | ஏற்றுக்கொள்ளப்படும் இடம் |
|---|---|---|
| 01 | மண்டைதீவு | இல. 135, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் கிளை விற்பனை நிலையம். |
| 02 | மண்டைதீவு | ,, ,, ,, ,, |
| 03 | அல்லைப்பிட்டி | இல. 128, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் கிளை விற்பனை நிலையம். |
| 14 | சரவணை | ,, ,, ,, ,, |
| 07 | வேலணை தெற்கு | கே. கே. எஸ். வீதி, கோணந்தோட்ட ஒழுங்கை, யாழ்ப்பாணம் சங்கத் தலைமை அலுவலகம். |
| 08 | சந்திரா | ,, ,, ,, ,, |
| 09 | சிற்பனை | ,, ,, ,, ,, |
| 10 | வங்களாவடி | மானிப்பாய் வீதி, கோணந்தோட்டம், யாழ்ப்பாணம் கிளை விற்பனை நிலையம். |
| 11 | வேலணை மத்தி | ,, ,, ,, ,, |
| 12 | சோளாவத்தை | ,, ,, ,, ,, |
| 13 | பள்ளம்புலம் | ,, ,, ,, ,, |
| 16 | அம்பிகை நகர் | ,, ,, ,, ,, |
| 06 | தேவி கோட்டம் | இல. 51, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் கிளை விற்பனை நிலையம். |
| 15 | கேணிக்கரை | ,, ,, ,, ,, |
| 04 | மண்கும்பான் | மானிப்பாய் வீதி, கோணந்தோட்டம், யாழ்ப்பாணம் கிளை விற்பனை நிலையம். |
| 05 | ஆலம்புலம் | ,, ,, ,, ,, |

கூட்டுறவு அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

பொ. கணேசலிங்கம்
தேர்தல் உத்தியோகத்தர்

(ஏ-3303)

## கொக்குவில் மேற்கு (ஐயனார்)

## சித்திவிநாயகர் கோவில்

## அலங்கார உற்சவம்

காலம்: 06-08-93 வெள்ளிக்கிழமை
நேரம்: பிறபகல் 6 மணி

நிகழ்ச்சி நிரல்

இரவு 6 மணி முதல் 8 மணி வரை
திரு. த. சிவகுமாரன் ஆசிரியர்
(யாழ். இந்துக் கல்லூரி)
அவர்கட்கு பொன்னாடை போர்த்து
கௌரவிக்கும் வைபவம் இடம்பெறும்.

இரவு 8 மணி முதல் இரவு 1 மணி வரை
மேளக்கச்சேரிகள்

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| நாதஸ்வரமேதைகளான | தவில்வித்துவான் |
| அளவெட்டி | K. R. புண்ணியமூர்த்தி |
| N.K பத்மநாதன் | இணுவில் |
| சாவகச்சேரி | தவில்மேதை |
| M. பஞ்சாபிகேசன் | V. தெட்சணாமூர்த்தியின் |
| | புதல்வர் T உதயசங்கர் |
| சாவகச்சேரி | தவில்மேதை |
| M. P. நாகேந்திரன் | N.R. சின்னராசா |
| | அவர்களின் புதல்வர்களான |
| | N R S. ரவீந்திரன் |
| | N. R. S சுதாகரன் |

இன்னிசைக் கச்சேரி

இரவு 1-00 மணிமுதல் அதிகாலை 5-00 மணிவரை
நல்லூர் அருணா குழுவினரின்

★ இன்னிசை மாலை ★

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
ஐயனார் ஆலய இளைஞர்கள்.

(இ-389)

மணிவாக்கு

"முட்டாள்தனம் அடிக்கடி அளவுகடந்து போவதுண்டு. ஆனால் அகங்காரத்துக்கு அளவேயில்லை."
- டாக்டர் ஜோன்சன்

# ஈழத் தமிழர் மீதான படுகொலைகளை
# ஸ்ரீலங்கா அமைச்சர் ஒப்புக்கொண்டார்

## சர்வதேச கண்காட்சியில் அரசுக்கு தலைகுனிவு

(வியன்னா)

ஆஸ்திரியத் தலைநகரான வியன்னாவில் நடைபெற்ற மனித உரிமைகள் மாநாட்டில் ஈழத்தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினை குறித்து விபரிக்கின்ற ஏராளமான நூல்கள் பிரசுரங்கள், படுகொலைப் படங்கள் போன்றவற்றுடன் ஈழத்தமிழர் போராட்ட வரலாற்றைச் சித்தரிக்கும் படங்களையும் உள்ளடக்கிய கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டது.

மனித உரிமைகளுக்கான தமிழர் மையம் என்ற அமைப்பு பெரிய அளவிலான தும், நிலைமையை விஸ்தாரமாகச் சித்தரிக்கக்கூடியதும், உணர்வைத் தூண்டக்கூடியதுமான இந்தக் கண்காட்சியை நடத்தியது.

இக்கண்காட்சி ஆயிரக்கணக்கான மக்களால் பார்வையிடப்பட்டதோடு பலரை நிலைகுலைய வைத்து அழுகை வரப்பண்ணியது. கென்யா நாட்டு மனித உரிமை அமைப்பின பிரதிநிதி ஒருவர் இக்கண்காட்சியைப் பார்த்து விம்மி விம்மி அழுத காட்சி அனைவரையும் கலங்க வைத்தது.

இக்கண்காட்சி எழுப்பிய தாக்கத்தினால் ஸ்ரீலங்கா அரச பிரதிநிதிகளையும் அதற்குத் தலைமை தாங்கிய வெளிவிவகார ராஜாங்க அமைச்சர் ஜோன் அமரதுங்காவையும் கண்காட்சி வந்து பார்க்குமாறு செய்தது.

ஆஸ்திரிய தொலைக்காட்சி நிறுவனத்தால் இக்கண்காட்சி படம் பிடிக்கப்பட்டு சர்வதேச பார்வைக்கு வழங்கப்பட்டதோடு ஈழத்தமிழர் படுகொலைகள் குறித்த கேள்விகளையும் ராஜாங்க அமைச்சரிடம் தொலைக்காட்சி நிறுவனத்தால் தொடுக்க வைத்தது.

அமைச்சர் ஜோன் அமரதுங்கா தமிழர் மீதான அரசாங்க படுகொலைகளை ஒத்துக்கொண்டதுடன் நிலைமை சீர்திருந்தி வருவதாகவும் தெரிவித்தார்.

இம்மாநாடு ஜூன் 14-ம் திகதி முதல் 25ம் திகதி வரை நடைபெற்றது. ஈரான் நாட்டில் 1968-ம் ஆண்டு முதன் முதலாக நடைபெற்ற மனித உரிமைகள் மாநாட்டிற்குப் பின்னர் 25-வது ஆண்டில் இம்மாநாடு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

அரச பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் என்றரீதியில் 6000க்கும் அதிகமானோர் இம்மாநாட்டில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. (கீ)

# நமது நோக்கு

## சர்வதேச உதவி ஒளி தருமா?

ஓர் மரத்தின் கீழிலிருந்து சிலர் சாவகாசமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது - ஒருவர் பரபரப்பாக வந்து, 'முழங்கால் மட்டும் ஒருவன் சேற்றுக்குள் புதைந்திருக்கிறான்; ஓடி வருக உதவிக்கு!'' என்று பதைபதைத்து அழைத்தார்!

"என்ன அவசரம்? எங்கள் கதையை முடித்துவிட்டு ஆறுதலாக வருகிறோம்; முழங்கால் மட்டும் தானே சேற்றுக்குள்!''

"இல்லை; அவன் சேற்றுக்குள் தலைகீழாகப் புதையுண்டிருக்கிறான்! சேற்றுக்கு மேலே முழங்கால் பகுதி மாத்திரமே தெரிகிறது!'' என்றிருக்கிறார் உதவி கோரி வந்தவர்!

அமெரிக்க வெளியுறவுச் செயலாளராக இருந்த கீஸிங்கர், அண்மையில் நிருபர் ஒருவருக்குக் கூறிய துணுக்கு இது!

இன்றைய நிலையில் எமது கவனத்திற்கு - சிந்தனைக்கு - உரிய துணுக்கு இது!

அரசியற் பொருளாதாரச் சீரழிவுச் சேற்றில் நாடு எந்தளவிற்குப் புதைந்திருக்கின்றது என்பதைத் தெற்கில் பலர் புரிந்திருக்கவில்லை.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், ஆடம்பர விழாக்கள், வானொலிச் செய்திகள், பத்திரிகைகளின் திசைப்புகள், 'கதைகள்' - இவை ஏற்படுத்திய மாயையினால், மக்கள் உள்ள நிலை அறியாது, கனவுலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் போல் தெரிகிறது.

வட-கிழக்கிலே நடக்கும் யுத்தம் இப்பகுதிகளில் மக்கள் அனுபவிக்கும் வேதனைகள், "இந்த வேதனைகளை இனியும் தாங்க முடியாது; பிரிந்து வாழ்வதே மேல்!'' என்ற எண்ணம் வளரும் வேகம் தெற்கிலே தெரியவில்லை; தெரிவிக்கப்படவில்லை!

"தீர்வு கண்ணுக்கு எட்டிய தூரத்தில் இல்லை; பாதுகாப்புச் செலவீனம் அதிகரிக்கின்றது!'' என்ற கவலையை ஜனாதிபதி வெளியிட்டிருந்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுக்கு சர்வதேச உதவியை நாடவுள்ளதாக, ஜனாதிபதி மலேசியச் செய்தி நிறுவனம் ஒன்றிற்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

இனப்பிரச்சினை காரணமாக நாடு பெரும் அழிவை எதிர்நோக்கி வருகின்றது என்பதை அவர் உணருகிறார்.

ஆனால், எதிர்க்கட்சியினரோ, இராணுவத் தீர்விலே அதீத நம்பிக்கை வைத்துக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

சர்வதேச உதவிகள் அமைதித் தீர்வுக்கு வழி வகுக்க வேண்டும் என்பதே பொதுமக்களின் கருத்தாக இருக்கும். அந்த உதவிகள் ஓட்டைகளை மேலும் கலக்காதிருக்க வேண்டும்.

# கணவன் மனைவி ஓரிடத்தில்
# பணியாற்ற இடமாற்ற திட்டம்

## கல்விச் சேவை சபை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கஷ்டப் பிரதேசங்களில் நீண்டகாலம் சேவையாற்றிய ஆசிரியர்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்றுசேவையாற்றக்கூடிய வாய்ப்பை வழங்கும் வகையிலும் நீண்டகாலமாகக் கடமையின் நிமித்தம் பிரிந்து வாழும் கணவன் மனைவி ஒரிடத்தில் சேவையாற்றக்கூடிய வகையிலுமாக இடமாற்ற வேலைத்திட்டம் ஒன்றை வகுத்து நடைமுறைப்படுத்துமாறு கல்விச்சேவைகள் சபை செயலாளர் திரு. எஸ். எஸ். வீரசிங்க அறிவித்துள்ளார்.

மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கு ஆசிரிய இடமாற்றம் சம்பந்தமாக அறிவித்துள்ள அறிவிப்பு ஒன்றில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதும் விடுவிப்பதும் தொடர்பாக பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் தத்தமது கோட்டங்களில் கல்விப் பணிப்பாளரின் ஆலோசனைப் பெற்று இடமாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஆசிரிய இடமாற்றங்களால் மாணவர்களின் கல்வி நிலை பாதிப்படையக்கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஓர் ஆசிரியர் இடமாற்றம் பெற்றுச் செல்லும்போது அவரது இடத்துக்குப் பொருத்தமான ஓர் ஆசிரியர் பதில் கடமையைப் பொறுப்பேற்றபின்னரே இடமாற்றத்தில் செல்லும் ஆசிரியர் விடுவிக்கப்படலாம் எனவும் திரு வீரசிங்க அறிவுறுத்தியுள்ளார். (109.கீ)

# 2 லட்சம் ஆசிய பெண்கள் மீது

## ஜப்பான் படை பாலியல் வன்முறை

### தற்போதைய ஜப்பான் அரசு ஒப்புக்கொண்டது

(டோக்கியோ)

இரண்டாவது உலகப் போரின் போது 2 லட்சம் ஆசியப் பெண்களை பாலியல் வன்முறைக்கு அடிமைகளாக ஜப்பான் பயன்படுத்தியதாக ஜப்பானிய அரசு தற்போது முதன் முறையாக ஏற்றுக்கொண்டுள்ளது.

19 மாதங்களாக 2-வது உலகப் போரின்போது ஜப்பான் நடந்து கொண்ட விதம் பற்றி ஆராய்ந்த குழு, இத்தகவலை வெளியிட்டது.

2-வது உலகப்போரின் போது ஜப்பான் ஆசிய நாடின் சிலவற்றை தன்வசமாக்கியிருந்தது. அப்போது மோசமான சூழலில் பேரிட்ட ஜப்பானிய படையினர் அந்தந்த நாடுகளில் கட்டாயமாக பெண்களை பாலியல் வன்முறைக்குள்ளாக்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போரில் தோற்றுப் போன ஜப்பான் அப்போது தான் இப்படியாக ஆசிய பெண்களை மோசமான முறையில் துன்புறுத்தியுள்ளமைக்கு, ஜப்பான் இப்போது வருத்தம் தெரிவித்து, மன்னிப்பு கோரியுள்ளது.

கொரியாவில் ஆயிரக்கணக்கான பெண்கள் ஜப்பானிய போர் வீரர்களால் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப் பட்டனர் என்றும் ஜப்பான் இப்போது அது குறித்து ஒப்புக் கொண்டு வருத்தம் தெரிவித்ததை தென் கொரிய அரசு வரவேற்றுள்ளது. (கே-ரி)

## திருக்கேதீஸ்வரர் ஆலயத்தில் வழிபாடு

(மானிப்பாய்)

சரித்திரப் புகழ் பெற்ற திருத்தலமான மன்னார் திருக்கேதீஸ்வரர் ஆலயத்திற்கு நீண்ட காலத்துக்கு பின்னர் மீண்டும் பக்தர்கள் வரத்

(4-ம் பக்கம் பார்க்க)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை சாவகச்சேரிப் பிரிவில் அல்லாரை தமிழ்க் கலவன் பாடசாலையில் நாளை 7ம் திகதி முற்பகல் பத்து மணிக்கு "செஞ்சிலுவைச் சங்கத்தின் தொண்டுகள்'' விடயமாக ஒரு கருத்தரங்கு நடாத்தவுள்ளது.

## இராசிபலன்

06-08-1993

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு ஆடி 22)

சதுர்த்தி ந. இ. 12-04வரை பூரட்டாதி பி. ப. 2-27 வரை இராகுகாலம் காலை 10-34 முதல் 12-04 வரை. சுப நேரம் காலை 6-04 முதல் 7-34 வரை. சித்தயோகம்.

மேஷம்: துணிச்சல், இஷ்ட அனுகூலம், உறவினர் நன்மை.

இடபம்: நண்பர் சேர்க்கை, மனக்களிப்பு, புதிய முயற்சி.

மிதுனம்: வீண் அவஸ்தை, பயணத்தடை, அச்சம்.

கடகம்: உடல் அலைச்சல், வீண் ஆலோசனை, தொழில் நஷ்டம்.

சிம்மம்: அதிகாரிகள் சந்திப்பு, பணவரவு, இனிய செய்தி.

கன்னி: தொழில் முதலீடு, மனத்தில் வெறுப்பு, காரிய சித்தி

துலாம்: கணவர் துயர், சோம்பல், பிணி வாட்டம்,

விருச்சிகம்: சகோதர வெறுப்பு, குடும்ப செலவு, கவலை.

தனுசு: விரும்பிய சுகம், வாக்குத்திறமை, உல்லாசம்.

மகரம்: ஆகார உணவு, இடையூறு, இனசன சங்கடம்.

கும்பம்: சுபசெய்தி, குடும்ப சந்தோஷம், தெய்வ தரிசனம்.

மீனம்: இல்லற துன்பம், வெளியார் குறை, மனச்சுமை.

ஜோஸ்யர்


## தொடர்பு கொள்ளவும்

யாழ். மாவட்டத்தில் குழாய்க் கிணறு அடித்தும் தொழிற்பதில் அனுபவம் வாய்ந்தவர்கள் 06-08-93, 07-08-93, 08-08-93 ஆகிய தினங்களில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

உட்கட்டுமானப் பகுதி,
த. பொ. மே. கழகம்,
இல. 03, செம்பியன் லேன்,
கொக்குவில்.

(ஏ-3315)


**மண்ணும் மரமும் பிரியாததுபோல்**
**மரமும் மனிதனும் பிரியாதவையே**

## தொடரும் துயரம் தொலையும்

விடியும் பொழுதில் எழுமுன் உனது
அசையா மணியின் ஒலிகேட்கும்
படியும் மனமுன் அடியின் நிழலில்
அணையும் மழியா நிலைசேரும்
உடலும் முயிரும் இருளும் முனது
உருவும் மயிலும் அரவமும்
உலகஞ் சுழலும் படிநின் கருணை
மழையின் நிறைவில் உயிர்வாழும்
தொடருந் துயரந் தொலையும் எதிலும்
அலையா மனமும் நிலையாகும்
கடர்வேல் நல்லைக் குமரன் மயில்மீ
தமரும் மெழிலும் நடமாடும்.

— இ. தயாபரன்.

★ இன்று நல்லைக்கந்தன் 14ம் நாள் உற்சவம்

விவசாயிகள் ஓய்வூதியத்திட்டம்:

# வட-கிழக்கு விவசாயிகளையும் சேர்த்துக்கொள்ள அரசு வசதி

(கொழும்பு)

விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தில் வடக்கு-கிழக்கு விவசாயிகளையும் சேர்த்துக்கொள்வதற்காக விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்ந்துகொள்வதற்காக விண்ணப்பிக்கும் திகதி பின்போடப்பட்டுள்ளது என விவசாய அமைச்சு நேற்று அறிவித்தது.

விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தில் 50 வயதுக்கும் 59 வயதுக்குமிடைப்பட்ட விவசாயிகள் சேர்ந்துகொள்ளலாம்.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உள்ள விவசாயிகளும் இத்திட்டத்தில் சேர்ந்துகொள்வதற்காக இதன் கால அவகாசத்தை டிசம்பர் மாதம் 31-ந் திகதி வரை நீடிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு மேலும் தெரிவித்தது. —வி

## 'சுதந்திரப் பறவைகள்'

(யாழ்ப்பாணம்)

"சுதந்திரப் பறவைகள்" ஆவணி மாத இதழ் நாளை வெளிவருகின்றது. இந்த இதழில் மண்கிண்டி மலை முகாம் தாக்குதலில் மகளிர் படையணி வீராங்கனை, உரிமைக்காக உரத்த குரல் எழுப்புங்கள் கட்டுரைகள், புதுமைப் புதுவிடியல் கவிதை கண்மலர்வாய் சிறுகதை, பெண்களும் விடுதலை உணர்வும் வளர்முக நாடுகளில் பெண்களும் கல்வியும் போன்ற சிறப்பம்சங்களோடு வெளிவருகின்றது. (ம)

## தேசிய கல்விச் சான்றிதழ்

# ஆங்கில பரீட்சை 26ல் நடைபெறும்

(திருநெல்வேலி)

தேசிய ஆங்கில கல்விச்சான்றிதழ்ப் பரீட்சை இம்மாதம் 26-ம் திகதி நடைபெறும் என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சை சென்றமாதம் 31ம் திகதி நடைபெறவிருந்து பின்னர் பிற்போடப்பட்டது தெரிந்ததே. (157)

## புலிகளை அடக்க

# தமிழக பொலிசாருக்கு 10 கோடி ரூபா நிதியுதவி

(சென்னை)

விடுதலைப் புலிகளின் நடவடிக்கையை தமிழகத்தில் ஒடுக்குமுகமாக மத்திய அரசு தமிழக பொலிஸ்படைக்கு 10 கோடி ரூபா நிதியுதவி வழங்கியதாக மத்திய உள்துறை பாதுகாப்பமைச்சர் ராஜேஷ் பைலட் தெரிவித்தார்.

மக்களவையில் நேற்று அவர் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தமிழக அரசிற்கு 500 ஏ.கே. 47 ரக துப்பாக்கிகள் குறைந்த விலையில் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் வெடி மருந்துப் பொருட்கள் பாதுகாப்புக்கு தேவையான உபகரணங்களையும் வழங்குவதற்கு உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுடன் தாம் இவ்விடயம் குறித்து நடாத்திய பேச்சுவார்த்தையின் விளைவாகவே மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவித்தார். (க)

# தேர்தல் கமிஷனருக்கு எதிராக தமிழக அரசு வழக்குத் தாக்கல்

(சென்னை)

பழனி நாடாளுமன்றத் தொகுதிக்கும், ராணிப்பேட்டை சட்டப்பேரவைத் தொகுதிக்குமான இடைத்தேர்தலை காலவரையறையின்றி தேர்தல் கமிஷன் ஒத்திப்போடப்பட்டதை எதிர்த்து தமிழக அரசு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

தேர்தல் கமிஷனின் மேற்படி அறிவிப்பானது அரசியல் சாசன அதிகாரத்தை தவறாக பயன்படுத்துவதாகும் என்று தனது மனுவில் தமிழக அரசு தெரிவித்துள்ளது. —க

## கிளாலி நோக்கி ஷெல்வீச்சு

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து கிளாலிக் கடற்கரையை நோக்கி நேற்று பலத்த ஷெல் தாக்குதலும் இடையிடையே துப்பாக்கி வேட்டுக்களும் படையினரால் மேற்கொள்ளப்பட்டன.

நேற்றிரவு இரவு 8 மணியிலிருந்து இத்தாக்குதல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டதாக தெரியவருகிறது. (170)

## திட்ட பணிப்பாளருக்கு புகார்

(யாழ்ப்பாணம்)

காதுவைக் கப்பலில் யாழ். ப.நோ.கூ. சங்கத்துக்கு அனுப்பப்பட்ட 100 ரூமின் நீர்இறைக்கும் இயந்திரங்கள் இதுவரை தமக்கு கிடைக்கவில்லை என மேற்படி சங்கத்தின் பொது முகாமையாளர் யாழ் செயலக புனர்வாழ்வுத் திணைக்கள திட்டப்பணிப்பாளரிடம் முறையீடுசெய்துள்ளார். வி

## திருமலைக்கும் மன்னாருக்கும் அகதிகள் திரும்பிவருவர்

(கொழும்பு)

இந்தியாவில் தற்போது தங்கியிருக்கும் இலங்கை தமிழ் அகதிகள், இம்மாதம் 13ம் திகதி முதல் கட்டம் கட்டமாக திருமலைக்கும், மன்னாருக்கும் அனுப்பப்படுவார்கள் என்று தமிழ்நாடு அரசு நேற்று அறிவித்தது.

3,851 பேர் கப்பல் மூலம் திருமலைக்கும் 2,997 பேர் மன்னாருக்கும் அவர்களின் சொந்த விருப்பத்தின் பேரில் அனுப்பப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (வி)

கிரிக்கெட்

## இலங்கை 351 ஓட்டங்கள்

(கொழும்பு)

இலங்கைக்கும்-இந்தியாவுக்குமிடையில், கொழும்பு சரவணமுத்து விளையாட்டரங்கில் நடைபெறும் 3வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் 2ம் நாள் ஆட்டம் நேற்று முடிவடையும்போது இந்தியா முதல் இன்னிங்ஸில் விக்கெட் நஷ்டமின்றி 84 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இலங்கை தனது முதல் இன்னிங்ஸில் மொத்தம் 351 ஓட்டங்களைப் பெற்றது. அரவிந்த டி சில்வா 148 ஓட்டங்களைப் பெற்றார்.

இன்று ஓய்வுநாளாகும். (வி)

## இலவச கண் சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ நூற்றாண்டு நிகழ்ச்சியாக பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேமாச்சிரமத்தில் நாளை சனிக்கிழமை 7-ம் திகதி காலை 9 மணிக்கு கண் வைத்திய நிபுணர் டாக்டர் வி. அருணாசலத்தின் உதவியுடன் சேமாச்சிரமத்தில் இதுவரை பதிவு செய்யப்பட்ட பின்தங்கியவர்களுக்கு இலவச கண் சிகிச்சை முகாம் நடாத்தப்படும்.

## மோட்டார் ஊர்தி உரிமையாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய், உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் மோட்டார் ஊர்திகளைப் பதிவு செய்யும் செயற்பாட்டின் மூன்றும் கட்ட நடவடிக்கைகள் எதிர்வரும் 14ம் திகதியுடன் நிறுத்தப்படும் என போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு அறிவித்துள்ளது.

எனவே தமது ஊர்திகளைப் பதிவு செய்து கொள்ளாதவர்கள் உடன் அவற்றைப் பதிவு செய்யுமாறுமோட்டார் ஊர்தி பதிவுப் பகுதியினர் கேட்டுள்ளனர்.

வடக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குதலின் முன் கரையோரப் பகுதியில் உள்ள மக்களுக்கு எச்சரிக்கை துண்டுப்பிரசுரங்களை விமானப்படையினர் போடுகின்றனர் என்றார். (க)

நீர் அருந்தி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில், நாம் ஐந்து நாட்கள் தண்ணீர் குடித்து உண்ணாவிரதம் அனுஷ்டித்தோம். அதன்பின் நீராகாரத்தை நிறுத்தி உண்ணாவிரதத்தை தொடர்ந்தோம். இரண்டரை நாட்கள் நீர் அருந்தாமல் இருந்தோம்.

அரசும் பாதுகாப்பமைச்சும் எமது விடுதலை குறித்து நடவடிக்கை எடுப்பார்கள் என இன்னமும் தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

யுத்தக் கைதிகளது உறவினர்களது சார்பில் யுத்தக் கைதியான சாந்தலாவின் தாயாரான சோமாவதி தெரிவிக்கையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் ஜெனரல் ஹமில்டன் டெனிஸ் தமக்குக் கடிதம் எழுதியிருந்ததாகவும் ஆனால் தமது பிள்ளைகள் உண்ணாவிரதத்தை கைவிடமாட்டார்கள் என்றும் நீராகாரம் அருந்தி உண்ணாவிரதத்தை தொடர்வார்கள் என்றும் தெரிவித்தார்.

நேற்று 8-வது நாளாக யுத்தக் கைதிகள் உண்ணாவிரதம் தொடர்வதும் இங்கு குறிப்பிடத்தக்கது. —க

## திருக்கேதீஸ்வரர்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

1990-ல் ஏற்பட்ட அசம்பாவித சம்பவங்களைத் தொடர்ந்து இக்கோவிலின் நித்திய பூசைகள் நடைபெறாமல் இருந்தன.

தற்போது இதுவரை கும்பாபிஷேகம் நடாத்தப்படாத போதிலும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் சென்று வழிபட்டு வருகின்றனர்.

இவர்கள் செல்வதற்காக மன்னாரிலிருந்து திருக்கேதீஸ்வரம் வரை பஸ் கட்டணமாக 20 ரூபா அறவிடப்படுகிறதாம். தலைமன்னார், பேசாலை போன்ற இடங்களிலிருந்தும் இவ் ஆலயத்திற்கு பக்தர்கள் சென்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (71)

## வவுனியாவில் நேர்முகப் பரீட்சை

(திருநெல்வேலி)

பாடசாலைகள், கல்வித் திணைக்களங்களில் உள்ள அலுவலக ஊழியர்கள், காவலாளிகள் ஆய்வுகூட உதவியாளர் ஆகியபதவிவெற்றிடங்களுக்கு ஆட்களை சேர்ப்பதற்கான நேர்முகப்பரீட்சை இம்மாதம் 15ம் திகதி வவுனியாவில் நடைபெற உள்ளது.

நேர்முகப் பரீட்சை முன்னர் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் வவுனியாவில் இந்தப் பரீட்சை நடைபெறும் என இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது. (157)

விசாரணைக்குழு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விசாரணைக் குழுவில் மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா, பிரிகேடியர் நந்த டி சில்வா, பிரிகேடியர் சிசில் பீரிஸ், கேர்ணல் சிசிர விஜயசிங்க ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். (க)

யாழ். அரச

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யிருந்ததாக யுத்தக்கைதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை இந்தக் கடிதம் யுத்தக் கைதிகள் வசம் ஒப்படைக்கப்பட்டது. (க)

புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யைப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் அரியாலை கிழக்குப் பகுதியை நோக்கி நேற்று முன் தினம் இரவு பலத்த ஷெல் தாக்குதல்களையும் 50 கலிபர் துப்பாக்கி வேட்டுக்களையும் மேற்கொண்டனர். (க)

கைதிகளை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கைதிகள் எவரேனும் உயிரிழப்பார்களேயானால் கொழும்பிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அலுவலகத்தின் முன்னே தாம் தற்கொலை செய்து கொள்வதாக கைதிகளின் உறவினர்கள் கொழும்பில் தெரிவித்துள்ளனர். (இ)

மணலாறு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில்: விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்ட இராணுவ முகாம் மணலாறுப் பகுதியிலே இரண்டாவது பெரிய முகாம். நூற்றுக்கு மதிகமான படையினர் அம்முகாமில் இருந்தனர். இம்முகாமிலிருந்து ஏனைய மினி முகாம்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டு வந்தன. (க)

## கலைவிழா

(மானிப்பாய்)

யாழ். நல்லூர் சென்பெனடிக்ற் றோ. க. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் நடாத்தும் கலைவிழா இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு அரியாலை சனசமூகநிலைய அரங்கில் நடைபெறவுள்ளது.

அம்புலன்ஸ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாகனம் (63 வயது) என்பவர் சாவகச்சேரியிலிருந்து அவசர சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு ஏற்றிவரப்பட்டார்.

வழியில் அம்புலன்ஸ் வாகனத்தின் சில்லு காற்றுப் போனது. அதனைத் திருத்தி இயக்குவதற்கு தாமதம் ஏற்பட்டது.

இதனால் உரிய நேரத்தில் அந்தநோயாளிக்கு அவசர சிகிச்சை அளிக்க முடியாமல் போய்விட்டதால் அவர் உயிர் பிரிந்துவிட்டதாக உறவினர் கவலை அடைந்தனர். (170)

தடைசெய்யப்பட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிமீது அரசு விதித்த பொருளாதாரத் தடையை நீக்கவேண்டுமென்றும் விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றார்கள்.

இதேநேரம் யுத்தக்கைதிகளின் விடுதலை சம்பந்தமாக யாழ். ஆயர் இல்லம் உடனடியாக தலையிடவேண்டும் என்றும் யாழ். ஆயரின் தலையீட்டினால் தமது பிள்ளைகளுக்கு நல்லதொரு முடிவு ஏற்படும் என்று தாம் முழு நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் யுத்தக் கைதிகளின் உறவினர்களின் நண்பர்கள் நேற்று கொழும்பிலுள்ள பி.பி.ஸி. நிருபரிடம் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது. —வி

புதிய தேர்தல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அபிப்பிராயங்களை முதலில் அறிந்து கொள்ளவேண்டும்.

இவ்வாறு எதிர்கட்சிகள் அரசிடம் வேண்டுகோள் விடுத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (வி)

விவசாய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தின் மீது நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தின்போது மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

1981-ம் ஆண்டிலிருந்து 1991ம் ஆண்டு கால இடைவெளியில் வடக்கு-கிழக்குப் பகுதி விவசாய அபிவிருத்திக்கென பலவெளிநாட்டு நிறுவனங்களினால் அனுப்பப்பட்ட பலகோடி ரூபா பெறுமதியான விவசாய உபகரணங்களில் பெரும் மோசடிகள் நடைபெற்றது தற்போது தெரியவந்துள்ளதாகவும், இதை அரசு உடனடியாக விசாரணை செய்யவேண்டும் என்றும் பல தமிழ் எம். பிக்கள் அரசைக் கேட்டுக்கொண்டனர். —வி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office, Sri Lanka under Licence Number B/10336/B